**கொலன்னாவ நகர சபை - 2022**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கொலன்னாவ நகர சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 255) 181(1) ஆம் உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள கொலன்னாவ நகர சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.
2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நகர சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு,

முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது நகர சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்
- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்
- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் கீழே குறிப்பிடப்படுகின்ற தேவைகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் நகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்ததாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

## 1.6 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 ஆம் ஆண்டின் போது ஆரம்பிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்ட கணனி மென்பொருளை அபிவிருத்தி செய்யும் செயற்றிட்டம் மீளாய்வாண்டில் இரத்துச் செய்யப்பட்டிருந்த போதிலும் அதற்காக 2021 ஆம் ஆண்டின் போது நடைமுறை வேலை கணக்கில் வரவு வைக்கப்பட்ட ரூபா 3,500,000 நிதிஏற்பாடு மற்றும் கடன்கொடுத்தோர் கணக்குகளில் இருந்து அகற்றப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். அந்த ரூபா 3,500,000 ஆன பெறுமதி நடைமுறை வேலைக் கணக்கிலும் கடன்கொடுத்தோர் கணக்கிலும் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாகக் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நேர் ஊழியத்தின் கீழ் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட வீதி ஒன்று கொங்குறீட் இடுவதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி ரூபா 225,000 நடைமுறை வேலைக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம். நேர் ஊழிய முறையின் கீழ் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி ரூபா 225,000.00 ஆன வீதியொன்று கொங்குறீட் இடுதல் நடைமுறை வேலைய கணக்கிலும் கடன்கொடுத்தோர் கணக்கிலும் நீக்கப்படுகின்றது. | -மேற்படி- |
| (இ) | 2021 ஆம் ஆண்டில் விற்பனை செய்யப்பட்ட இயந்திரத்திற்காக கணிப்பிடப்பட்ட இலாபம் ரூபா 1,305,140 தொகை திரண்ட நிதியக் கணக்கில் செலவு வைப்பதற்குப் பதிலாக 2022 ஆம் ஆண்டில் நானாவித வருமானக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம். இது முன்னைய ஆண்டில் கிடைத்த வருமானமாக இருந்தமையால் தற்போது திரண்ட நிதியக் கணக்கில் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இவ்வாறான வழுக்கள் ஏற்படாமல் இருப்பதற்கு கண்காணிக்கப்படும். | -மேற்படி- |
| (ஈ) | கட்டிட அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக கட்டிடக் கணக்கில் வரவு வைக்க வேண்டிய ரூபா 5,247,345 பொருத்திகள் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம். வழுக்கள் 2023/JE/10 மூலம் சரிசெய்யப்படும். | -மேற்படி- |

### 1.6.1 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபா 59,950,301 பெறுமதியான ஐந்து கணக்கு மீதிகளுக்குரியதாக இனங்காணப்படாத மீதிக் கணக்கில் மாற்றுவதற்காக அங்கீகாரம், விரிவான பட்டோலை மற்றும் நாட்குறிப்புக்களுக்கான விபரம் சமர்ப்பிக்காமையினால் கணக்காய்வின் போது திருப்திகரமாக பரீட்சிப்பதற்கு முடியாதிருந்தது. | ஒரு வருட காலம் பழமையான மீதி தொடர்பாக கண்டறிந்து கணக்குகளை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | உரிய அங்கீகாரம் மற்றும் விரிவான பட்டோலைகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

### 1.6.2 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) | நிதிப் பிரமாணம் 104(1) | ரூபா 52,000 பெறுமதியான நூலகத்தின் புத்தகள் தொலைந்து போனமை தொடர்பாக பரிசோதனை ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். தற்போது பொறுப்புவாய்ந்தவரிடம் இருந்து குறித்துரைத்த தீர்மானிப்பதற்கு பரிசோதனை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | உரிய மெய்மையாய்வை மேற்கொண்டு ஏற்பட்ட இழப்பை மீளளிப்புச் செய்தல் வேண்டும். |
| (ii) | நிதிப் பிரமாணம் 371(5) | முற்பணம் ஒன்று விநியோகிக்கப்பட்ட பின் உரிய பணிகள் முடிவடைந்து பத்து நாட்களுக்குள் முற்பணம் தீர்க்க வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது 19 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட ரூபா 1,106,500 தொகை தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | முற்பணத்தை வழங்கும் போது, 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 01/2020 இன் நிதிப் பிரமாணம் 371(5) திருத்தத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென கடுமையாக உத்தியோகத்தருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளமையால் எதிர்காலத்தில் இவ்வாறான குறைபாடுகள் ஏற்படாமல் இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 1946 இன் 30 ஆம் இலக்க ஆதனவரி மற்றும் மதிப்பீட்டுச் சட்டத்தின் 20 ஆம் பிரிவு | ஆதனவரி அறவிடுவதற்காக சபை அதிகாரப் பிரதேசத்தில் சகல அசைவுறாத ஆதனங்களும் 05 வருடங்களுக்கு ஒரு தடவை மதிப்பீடு செய்யவேண்டியிருந்த போதும் சபையினால் 07 வருடங்களுக்கு முன் பெறப்பட்ட மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு ஆதனவரி மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. | கொலன்னாவ நகர சபை அதிகாரப் பிரதேசத்தில் ஆதனங்களின் மதிப்பீடு 2012 ஆம் ஆண்டின் பின்னர் மேற்கொள்ளப்படவில்லை. விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தால் 2023 ஏப்ரல் மாதம் முதல் மதிப்பீட்டு நடவடிக்கைகள் ஆரம்பிப்பதற்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் மதிப்பீடு திருத்தும் நடவடிக்கைகள் 2024 ஆம் ஆண்டு முதல் அமுல்படுத்த முடியும். | சகல அசைவுறாத ஆதனங்களும் காலரீதியில் மதிப்பீடு செய்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 71,698,962 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 55,553,691 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானமான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்ப ட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்ப ட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | ஆதன வரியும் வரியும் | 93,000,000 | 93,136,471 | 80,591,014 | 75,122,890 | 90,000,000 | 93,266,805 | 79,144,091 | 62,802,298 |
| (ii) | வாடகை | 12,117,142 | 12,117,142 | 9,783,082 | 2,334,060 | 5,860,562 | 5,860,562 | 4,446,015 | 1,414,547 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 601,000 | 601,000 | 601,000 | - | 686,000 | 686,000 | 686,000 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 6,485,000 | 7,095,252 | 7,095,252 | - | 6,037,727 | 6,037,727 | 6,037,727 | - |
| | மொத்தம் | 112,203,142 | 112,949,865 | 98,070,348 | 77,456,950 | 102,584,289 | 105,851,094 | 90,313,833 | 64,216,845 |

### 2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரித்தலின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **(i) வீத வரியும் வரியும்** | | |
| மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு நிலுவை ஆதனவரி பெறுமதி ரூபா 75,122,890 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 40,000 இற்கு மேற்பட்ட நிலுவை பெறுதி உள்ள 93 ஆதனவரி நிலுவை மீதிகளில் இருந்து 2023 ஏப்ரல் 03 ஆந் திகதி வரையில் அறவிடவேண்டிய தொகை ரூபா 28,713,200 ஆகும். | 2023.01.01 ஆந் திகதியில் காணப்பட்ட நிலுவையில் ரூபா 40,000 இற்கு மேற்பட்ட பெறுமதியுடைய 26 ஆதனங்களின் ரூபா 11,316,758.58 தொகைகளும் உள்ளடக்கப்பட்டிருந்தது. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(ii) முத்திரைக் கட்டணம்** | | |
| மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத்தரப்பினர்களிடம் இருந்தும் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய முத்திரை கட்டணம் ரூபா 260,000,000 ஆகும். | கொழும்பு மற்றும் தெல்கந்த காணி பதிவாளர் அலுவலகத்தில் மேற்கொள்ள வேண்டிய ஆவணங்களை நாளதுவரையாக்கல் மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்படாமையினால் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளுக்குரிய பதிவேடுகளை பரீட்சித்தல் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | பெற வேண்டிய முத்திரைக் கட்டணத்தை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தரின் கோரிக்கையின் அடிப்படையில் 2022 யூன் மாதத்தின் போது பழக்கன்றுகள் கொள்வனவு செய்து 04 மாதங்களுக்கு அதிக காலம் சபையின் பிரதான | ஏற்றுக்கொள்கின்றோம். காணப்பட்ட சமூக பிரச்சினைகளின் காரணமாக ஊழியர்களின் வருகை குறைந்த மட்டத்தில் | உரிய சமூக அபிவிருத்தி நடவடிக்கைகளை தாமதமின்றி ஆக்கபூர்வமானதாக நிறைவேற்றுதல் |

| | | |
|---|---|---|
| கட்டிடத்தின் முன் குவித்து வைக்கப்பட்டிருந்ததுடன் அதில் ஒரு பகுதி அழிவடைந்திருந்தது. | காணப்பட்டமையால் கன்றுகள் சபை வளவில் வைக்கப்பட்டிருந்ததுடன் தற்போது வதுல்லவத்த என்ற மக்கள் செறிந்துள்ள மற்றும் கைத்தொழில் மயமாக்கலுக்கு அதிகம் உட்பட்ட பிரதேசத்திற்கு அண்மித்ததாக அந்த பழக்கன்றுகள் நட்டப்பட்டுள்ளது. | வேண்டும். |

### 3.2 நிதியத்தின் குறைவான பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மூலதன செயற்றிட்டம் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்ட பணம்<br>--------------------------------------------------- | | |
| நடப்பாண்டில் 16 அபிவிருத்தி செயற்பாடுகளுக்காக மதிப்பீடு செய்யப்பட்ட நிதிஏற்பாடு ரூபா 6,300,000 தொகையில் மீளாய்வாண்டின் இறுதித் திகதி வரையிலும் ரூபா 4,363,526 பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நிதி அமைச்சின் மூலம் விநியோகிக்கப்பட்ட 03/2022 ஆம் இலக்க தேசிய வரவு செலவுத்திட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் செலவினங்களை வரையறுக்க வேண்டி ஏற்பட்டிருந்தது. | சுற்றறிக்கையின் மூலம் மூலதனச் செலவினம் மாத்திரம் வரையறுக்க வேண்டியிருந்ததுடன் ஏனையவைகளும் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

### 3.3 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கொலன்னாவ நகர சபையில் கழிவுப் பொருள் முகாமைத்துவ செயற்பாடுகளுக்காக சபைக்கு வழங்கப்பட்ட மீத்தொட்டமுல்ல காணியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள கட்டிடங்களில் சில கட்டிடங்கள் உடைத்து அகற்றப்பட்டிருந்ததுடன் அதில் உடைத்து அகற்றப்பட்ட இரும்பு மற்றும் அமானா சீட் என்பன சபைக்கு கொண்டுவரப்பட்டிருந்த போதிலும் | அந்தக் கட்டிடப் பொருட்கள் ஆக்கபூர்வமானதாக பயன்படுத்தப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் கராஜை விரிவுபடுத்தி நிர்மாணிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டமையால் அதற்காக அந்தக் கட்டிடத்தின் பொருட்களைப் பயன்படுத்துவதற்கு | அகற்றப்பட்டவைகளை மீண்டும் பயன்படுத்துவற்கு முடியுமாயின் ஆக்கபூர்வமானதாக மீண்டும் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | |
|---|---|
| அவை சபையின் எந்தவொரு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளுக்கும் ஈடுபடுத்தப்படவில்லை. | தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேலும் கராஜில் வாகன உதிரிப்பாகங்களை பொருத்துவதற்காகவும் பயன்படுத்தப்பட்டுள்ளது. |

### 3.4. மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 36 உத்தியோகத்தர்களிடமிருந்து சபைக்கு அறவிட வேண்டிய ரூபா 2,212,952 மீதி நான்கு வருட காலத்திற்கு மேற்பட்ட காலம் முதல் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | உரிய நிலுவைப் பெறுமதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 ஆம் ஆண்டிற்காக சபையின் நிர்மாணங்கள், கைத்தொழில், பொது வசதிகள் மற்றும் காணி, கட்டிடம் தொடர்பாக போதியளவான உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கருத்து தெரிவிக்கப்படவில்லை. | உள்ளகக் கணக்காய்வு திட்டத்தின் பிரகாரம் கணக்காய்வு செய்ய வேண்டி இருந்ததுடன் உள்ளகக் கணக்காய்வை வலுப்படுத்துதலும் வேண்டும். |

### 4.2 நிலைபேறான அபிவிருத்தி நோக்கம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நகர சபையினால் நிறைபேறான அபிவிருத்தி நோக்கத்தை அடைந்து கொள்ளல் தொடர்பாக 2024 வரையான காலப்பகுதியும் இனங்காணப்பட்டிருந்தது. திட்டத்திற்குரிய செயற்பாடுகளை இனங்கண்டிருந்த போதும் 2022 ஆம் ஆண்டிற்காக வருடாந்த பாதீட்டு நிதிஏற்பாடு ஒதுக்கப்படாதிருந்ததுடன் 2019 ஆம் ஆண்டின் நிதிஏற்பாட்டுத் தொகையே குறிப்பிடப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம் 2023 ஆம் ஆண்டினை 2024 ஆம் ஆண்டில் திட்டத்தை நாளதுவரையாக்கி குறைபாடுகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களுக்குரிய செயற்பாடுகளை இனங்கண்டு பாதீட்டில் நிதிஏற்பாட்டை ஒதுக்கிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |